# பாரதியார் பல்கலைக்கழகம்
## BHARATHIAR UNIVERSITY
## COIMBATORE – 641 046, TAMILNADU, INDIA

| State University | Accredited with "A" Grade by NAAC | Ranked 13th among Indian Universities by MHRD-NIRF |
|---|---|---|


எண். சி6/காமராஜ் அறக்கட்டளை(2020–21)/2021 தேதி : 11.01.2021

அனுப்புநர்

பதிவாளர் (பொ)

பெறுநர்

1. பல்கலைக் கழகத் துறைத் தலைவர்கள்.
2. பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு உட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் அனைத்துக் கல்லூரி முதல்வர்கள்.
3. பாரதியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி முதல்வர்கள்
4. இயக்குநர், முதுகலை பட்டமேற்படிப்பு விரிவாக்க மையம்

ஐயா/அம்மா,

பொருள் : பாரதியார் பல்கலைக் கழகத்தில் "காமராசர் அறக்கட்டளை" யின் மூலம் உதவித் தொகை (2020–2021) வழங்குதல் தொடர்பாக.

பார்வை : துணைவேந்தர் அவர்களின் ஆணை நாள் 08.01.2021.

*********

பாரதியார் பல்கலைக்கழகத்தில் "காமராசர் அறக்கட்டளை" நிறுவப்பட்டுள்ளது. இவ்வறக்கட்டளைக்குரிய வழிமுறைகள் தங்களின் பார்வைக்காக அனுப்பலாகிறது. இதற்கான விண்ணப்படிவத்தை உரியவாறு பூர்த்தி செய்து இவ்வலுவலகத்திற்கு 29.01.2021–க்குள் அனுப்பும்படி வேண்டலாகிறது. பழைய விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்பினாலோ அல்லது விண்ணபத்தினை முறையாக பூர்த்தி செய்யாமல் அனுப்பினாலோ, அவ்விண்ணப்பம் எவ்வித முன்னறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

1. அறக்கட்டளையிலிருந்து உதவித்தொகை அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரி மாணவர்களுக்கு மட்டும் வழங்கப்படும். மேற்படி கல்லூரியில் உதவி பெறாத வகுப்பில் (Unaided Courses) பயிலும் மாணவர்களுக்கு இவ்வுதவித் தொகை வழங்கப்படமாட்டாது.
2. கல்லூரி முதல்வர் அறிவியல், கணிதவியல், சமூக அறிவியல், வணிகவியல் மற்றும் மேலாண்மை மற்றும் கலை ஆகிய பாடப்பிரிவுகளில் பயிலும் மாணவ/மாணவியர்களில் மதிப்பெண் தரவரிசைப் பட்டியலின்படி இளநிலையில் முதல் மதிப்பெண்கள் பெற்ற 5 மாணவ/மாணவியர்களின் விண்ணப்பப்படிவங்களையும், முதுநிலையில் முதல் மதிப்பெண்கள் பெற்ற 5 மாணவ/மாணவியர்களின் விண்ணப்பப்படிவங்களையும் பாடப்பிரிவுகள் வாரியாக பரிந்துரை செய்து அனுப்பப்படவேண்டும். (ஒரு பாடப்பிரிவிற்கு ஒரு விண்ணப்பப்படிவம் மட்டுமே அனுப்பப்படல் வேண்டும்).
3. ஒவ்வொரு ஆண்டும் மாணவருக்கு வழங்கப்படும் உதவித்தொகை தகுதி, நன்னடத்தை மற்றும் மதிப்பெண் அடிப்படையில் வழங்கப்படும்.

தொடர்ச்சி...2

Website: www.b-u.ac.in | E-Mail: regr@buc.edu.in | Phone: 0422-2428108/2428126 | Fax: +91 422 2425706

4. தற்பொழுது இளநிலை (U.G.) இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு, முதுநிலை (P.G.) இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர்கள் இந்த உதவித் தொகைக்கு விண்ணப்பிக்கலாம். ஆராய்ச்சி மாணவர்கள் (M.Phil./Ph.D.) இவ்வுதவித் தொகைக்கு விண்ணப்பிக்கலாகாது.

5. மாணவர்கள் எந்தப்பாடத்திலும் நிலுவை இருத்தல் கூடாது, தேர்வின் முதல் அமர்விலேயே தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அதற்கான சான்றுகள் கல்லூரி முதல்வரால் அளிக்கப்படவேண்டும்.

6. இந்த கல்வி உதவித் தொகையானது அரசு கல்லூரிகளில் இளநிலை மற்றும் முதுநிலையில் பயிலும் 15 மாணவ/மாணவியர்களுக்கும், அரசு உதவி பெறும் கல்லூரிகள் (aided courses only) இளநிலை மற்றும் முதுநிலையில் பயிலும் 15 மாணவ/மாணவியர்களுக்கும், பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் இளநிலை மற்றும் முதுநிலையில் பயிலும் 15 மாணவ/மாணவியர்களுக்கும் தனித்தனியே கீழ்கண்ட வகையில் வழங்கப்படும் என்பதனை தெரிவிக்கலாகிறது.

**இளநிலை**

| | | | |
|---|---|---|---|
| அறிவியல் | – | 3 | |
| கணிதவியல் | – | 1 | |
| சமூக அறிவியல் | – | 2 | |
| வணிகவியல் மற்றும் மேலாண்மை | – | 2 | |
| கலை | – | 2 | மற்றும் |

**முதுநிலை**

| | | |
|---|---|---|
| அறிவியல் | – | 1 |
| கணிதவியல் | – | 1 |
| சமூக அறிவியல் | – | 1 |
| வணிகவியல் மற்றும் மேலாண்மை | – | 1 |
| கலை | – | 1 |

7. பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளில் முதுநிலை பயிலும் பதினைந்து (15) மாணவ/மாணவியர்களுக்கு இவ்வுதவித் தொகையானது காமராசர் அறக்கட்டளை கல்வி உதவித் தொகை தேர்வுக்குழுவின் அறிவுறுத்தலின் படி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கலாகிறது.

8. இவ்வறக்கட்டளையின் சார்பாக உதவித் தொகை பெறும் மாணவர்கள் ‘முதல் மதிப்பெண் பெற்றவராக இருக்க வேண்டும்.

9. பாரதியார் பல்கலைக்கழகம் இவ்வறக்கட்டளைக்காக அவ்வப்போது உருவாக்கும் விதிமுறைகளுக்குட்பட்டும் சூழ்நிலைக்கேற்பவும் விதிமுறைகளில் தக்க மாற்றம் செய்தும் இந்த உதவித்தொகை வழங்கப்படும்.

10. இது குறித்த விண்ணப்பத்தை பல்கலைக்கழக இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளவும்,

பதிவாளர் (பொ)

REGISTRAR ★ BHARATHIAR UNIVERSITY ★ CBE-46

நகல் : மக்கள் தொடர்பு அதிகாரி அவர்கள் . இத்துடன் இணைத்துள்ள விண்ணப்பத்தினை பல்கலைக்கழக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டலாகிறது.